முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் அகப்பைச்சித்தர் அருளிய நித்திய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

07.02.2019, வியாழக்கிழமை

1. **ஆரப்பா அரங்கமகான் நாமசெபம்**
**அனுதினமும் சொல்லி வருவாராகில்**
**மாறுமப்பா பிணி கண்டம் யாவுமே**
**மரணமும் வெல்வர் என்று கூறி**

2. கூறியே அகப்பைச்சித்தர் யானும்
கூறிடுவேன் நித்ய பிரசன்ன ஆசி
அறிகின்ற **விளம்பி கலை திங்கள்**
**அறுநான்கு திகதி குருவாரம் தன்னில்**
**(விளம்பி வருடம் தை மாதம் 24ம் நாள் 07.02.2019, வியாழக்கிழமை)**

3. தன்னிலே அரங்கனுக்கு பகருவேன்
தவமோடு தானதருமம் செய் என
மண்ணுலகில் நடைமுறைபடுத்தி
மக்களையும் தருமத்தில் இணைத்து

4. இணைத்து கோடான கோடி மேலாக
இணையிலா தரும பலம் பெருக்கி
துணை வருவேன் அஞ்சேல் என
தொண்டர் படைகளை உருவாக்கி

5. உருவாக்கி காத்தருள் புரிகின்ற
உயர் ஞானி ஆறுமுக அரங்கனை
குருவாக ஏற்று உலகோர் வர
குறைபாடான அனைத்து கட்டங்களும்

6. கட்டங்களும் விலகி திடமும்
கணக்காக வளர்ச்சி பலமும்
இட்டம் போல் ஞான முதிர்ச்சியும்
எல்லோரும் சமம் எனும் தயவும்

7. தயவும் பரோபகார பெருக்கமும்
தன்னார்வ தொண்டாகி வளர்ந்து
நேயமுள்ள உயர் ஞானவான்களாக
நிலவுலகோர் மாற்றம் அடைவர்

8. மாற்றம் செய்ய வந்த ஞானி
மலர்பதம் பணிய தொடரவே
ஆற்றல் பெருக்கமும் அற்புதமும்
அடைவதுடன் ஆதாரம் அனைத்தும்

9. அனைத்தும் அளவாக இயங்கி
ஆன்ம பலமுடன் தரும நோக்கமுடன்
இணைத்திட எளிய பயிற்சிகளே
இணையிலா தவ பயிற்சி ஆகி

10. ஆகியே ஆறுமுகனார் துணை கூடி
ஆகாசம் எனும் தவவாசல் திறவு
மகிமைபட வாசி ஓட்டம் வசம்
மரணம் வெல்லும் சூட்சுமமும் அடைந்திடுவர்

11. அடைந்திட அரங்கமகான் தயவும்
அருளும் அறமும் துணை நிற்க
தடைபடா வாரீர் அரங்கனை நோக்கி
தானமும் தவமும் செய்த பலனடைவீர் நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் அகப்பைச்சித்தர் அருளிய நித்திய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

உலகினில் எவரெல்லாம் உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் நாமங்களை தினம்தினம் மறவாது பயபக்தியுடன் நாமஜெபமாக சொல்லி பூஜித்து வருகிறார்களோ, அவர்களெல்லாம் அரங்கன் அருளைப் பெற்று அவருக்கு உண்டான பிணி கண்டங்கள் எல்லாம் விலகிவிடும். அவர்கள் மரணத்தையும் வெல்லுகின்ற வாய்ப்பினை பெறுவார்கள் எனக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் தை மாதம் 24ம் நாள் 07.02.2019, வியாழக்கிழமையான** இன்றைய தினமதனிலே நித்திய பிரசன்ன ஆசி நூல்தனையே அகப்பைச்சித்தர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகப்பைச்சித்தர்.

தவங்களை செய்வது மட்டும் இல்லாமல் தவத்துடன் செய்யும் தானதருமமே ஞானம் தரும் என்றே உபதேசித்து தவத்துடன் தானதருமங்களையும் மக்கள் எல்லாம் செய்திட அளவிலாது தானதருமங்களையும் அரங்கா தாம் செய்வதுடன் மக்களையும் செய்திட சொல்லி நடைமுறைப்படுத்தி மக்களையும் தாம் செய்யும் அளவிலாத தர்மத்தில் இணைத்து செய்திட செய்து, கோடானுகோடி தர்மங்களை ஈடு இணையிலாது செய்து உலகின் தருமபலத்தை பெருக்கி அழைத்தால் அக்கணமே துணை வருவேன் அஞ்சேல் என தொண்டர்களுக்கு அருளி தொண்டர் படைதனை உருவாக்கி உலகினையும், தொண்டர்களையும் காத்தருள் புரிகின்ற உயர் ஞானி அரங்கமகானை உலக மக்களெல்லாம் குருவாய் ஏற்றுக் கொண்டு வழிபாடுகள் செய்து ஆறுமுக அரங்கமகா தேசிகனை பின்தொடர்ந்து வரவர, அவர்களுக்கு உண்டான அனைத்துவிதமான கஷ்டங்களும் விலகி மனோதிடமும் உண்டாகி வளர்ச்சியான சூழ்நிலைகளும் உண்டாகி நீடிய ஆயுளையும் ஆரோக்கியமான வாழ்வையும் பெற்று ஞான முதிர்ச்சியையும் படிப்படியாக பெற்று உயர்வர்.

எல்லோரும் சமம் எனும் சமதர்ம உணர்வும் எல்லா உயிர்களிடத்தும் தயவும் பரோபகார சிந்தையும் பெருகி தன்னலம் நீங்கி பொதுநல உணர்வு மேலோங்கி தன்னார்வ தொண்டாக ஆகி வளர்ந்து பண்புள்ள அன்புமிக்க ஜீவதயவுடைய உயர் ஞானவான்களாக ஆகிடுவர்.

உலகினில் உள்ள தீமைகளை அகற்றி நன்மைகளை உண்டாக்கி கலியுக மாமாயையில் இருந்து மக்களை மீட்டு அறியாமை இருள் நீக்கி ஞானம் எனும் ஒளி ஏற்றி கலியுகத்தை மாற்றி உலகினில் ஞானயுகத்தை அமைத்து ஞானபண்டிதன் முருகப்பெருமான் தலைமையில் ஞானஆட்சி

அமைத்திடவே முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்த அவதார மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனை உளமார குருவாக ஏற்று அண்ணல் அரங்கமகானின் மலர் பதம்தனிலே பயபக்தியுடன் பணிந்து அவரவரும் அரங்கன் கூறும் ஞானமொழிகளை மறுக்காது ஏற்று அரங்கமகானின் உபதேச வழியினை பின்பற்றி தூயநெறியில் நடந்துவர, அவரவர்க்கும் ஆற்றல் பெருக்கமும் அற்புதங்களையும் அடைந்து மனிதனை ஞானியாக்கும் அற்புதமான ஆறு ஆதாரங்களும் அவரவரின் தகுதிக்கேற்பவும், வினைகளுக்கு ஏற்பவும் அரங்கன் அருளால் அளவாக இயங்கிடும், இயக்கம் பெறும் அவர்களெல்லாம் தன்னிலை உயர தர்மபலம் பெருக்கிட வேண்டும். தர்மபலம் பெருக்கி ஆன்மபலம் பெருக்கி தருமத்தோடு யோகத்தையும் இணைத்திட எளிமையான மென்மையான யோகத்தை பயிற்சிகளை தருமத்தோடு குருநாதர் அனுமதியுடன் குருநாதர் முன்னிலையில் செய்திட எளிமையான பயிற்சிகளே இணையிலாத தவபயிற்சிகளாக ஆகி, முருகப்பெருமான் துணையும் கூடி, படிப்படியாக ஆதாரங்கள் ஆறும் இயங்கி ஆகாசம் என்கிற தசவாசல் எனும் சுழிமுனைக் கதவும் திறந்து மகிமைமிக்க வாசி ஓட்ட வசத்தையும் மரணம் வெல்லும் சூட்சுமத்தையும் அடைந்திடுவார்கள்.

அன்பர்களே வாசி ஓட்டம் வசப்படவும், தசவாசல் திறக்கவும், ஞானம் பிடிபடவும், சூட்சுமங்களை அறியவும் எல்லாம்வல்ல பரம்பொருள் முருகப்பெருமானின் அவதார ஞானி கலியுக யோக ஞான சற்குருநாதன் யுகமாற்ற மகா ஞானி ஞானிகளை உருவாக்கும் ஞானயோகி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தயவும் கருணையும் அருளும், அறமும் துணைநிற்க அவரவர் செய்யும் தர்மமும் துணை நிற்க வேண்டும்.

ஆதலினாலே அற்புத வாய்ப்பு தருகிறார், யோக ஞானம் அறிய அரங்கனும் அன்பர் தமக்கு வாரீர் வாரீர். அண்ணல் அரங்கமகானை நோக்கி விரைந்து வாரீர், சற்குருநாதன் அரங்கனை நோக்கி அரங்கன் திருவடியே கதியென சரணடைந்து தானமும் தவமும் செய்த பலனை அடைந்து ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ள உடன் விரைந்து வாரீர் வாரீர், ஆறுமுகனார் அமைத்த அரங்கனின் ஞானசபை ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலைக் நோக்கி, வாரீர் வாரீர் என உலகோரை ஞானம் பெற அழைக்கின்றார் அகப்பைசித்தர்.

–சுபம்–